181805

திருவொற்றியூர் க்ஷேத்திரத்தின்
மகிமையும்
மஹான்களின் ஸ்துதியும்

O23;38-2111TR
N29
181805

உ

சிவமயம்.

# திருவொற்றியூர் க்ஷேத்திரத்தின் மகிமையும் மஹான்களின் ஸ்துதியும்.

பு. அ. இலட்சுமணசாமி முதலியாரால்

தமது

ஸ்ரீ மனோன்மணி விலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

நெ. 6, பெருமாள் செட்டித் தெரு,


வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

1924.

All Rights Reserved. [அணா 2.

உ

கணபதி துணை.



30 APR 1924

# திருவொற்றியூர்.

### விநாயகர் துதி.

உள்ளமெனுங்கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைபடுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைகடீர்ப்பாம்.

### முருகர் துதி.

கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங்கடலுங் கலங்கக்கார்வந், துறங்குசிகைப் பொருப்புஞ்சூ ரப்பொருப்பும் பிளப்பமறை யுணர்ந்தோ ராற்று, மறங்குலவு மகத்தழலு மவுணமடவார் வயிற்றி னழலுமூள, மறங் குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள் வணக்கஞ்செய்வாம்.

### சரஸ்வதி அம்மையார் துதி.

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப் பத்திபடப் பரப்பித்திக்கு முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி பெறமுக்கண் மூர்த்திதாளிற், றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல் சூட்டவரிச் சுரும்புந்தேனுங் கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா ளடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

## திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

பண்-பஞ்சமம். (௩-ந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

விடையவன்விண்ணுமண்ணுந்தொழநின்றவன்வெண்மழுவாட்
படையவன்பாய்புலித்தோலுடைகோவணம்பல்கரந்தைச்
சடையவன்சாமவேதன்சசிதங்கியசங்கவெண்டோ
டுடையவனூனமில்லியுறையுமிடமொற்றியூரே.

ஒண்பிறைமல்குசென்னியிறைவனுறையொற்றியூரைச்
சண்பையர்தந்தலைவன்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்பத்தும்பரவிப்பணிந்தேத்தவல்லார்
விண்புனைமேலுலகம்விருப்பெய்துவர்வீடெளிதே.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருநேரிசை. (௪-ந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச்சடையில்வைத்தவேதகீதன்றன்பாதம்
மெள்ளத்தானடையவேண்டின்மெய்தருஞானத்தீயாற்
கள்ளத்தைக்கழியநின்றார்காயத்துக்கலந்துநின்று
உள்ளத்துளொளியுமாகுமொற்றியூருடையகோவே.

சமையமேலாறுமாகித்தானொருசயம்புவாகி
இமையவர்பரவியேத்தவினிதினங்கிருந்தவீசன்
கமையினையுடையராகிக்கழலடிபரவுவார்க்கு
உமையொருபாகர்போலுமொற்றியூருடையகோவே.

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை. (௪-ந் திருமுறை.)

18/1805

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
ஓம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே.

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே.

திருச்சிற்றம்பலம்.



திருவிருத்தம். (௪-ந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

செற்றுக்களிற்றுரிகொள்கின்றஞான்றுசெருவெண்கொம்பொன்
றிற்றுக்கிடந்ததுபோலுமிளம்பிறைபாம்பதனைச்
சுற்றிக்கிடந்ததுகிம்புரிபோலச்சுடரிமைக்கும்
நெற்றிக்கண்மற்றதன்முத்தொக்குமாலொற்றியூரனுக்கே.

இன்றரைக்கண்ணுடையாரெங்குமில்லையிமயமென்னும்
குன்றரைக்கண்ணன்குலமகட்பாவைக்குக்கூறிட்டநாள்
அன்றரைக்கண்ணுங்கொடுத்துமையாளையும்பாகம்வைத்த
ஒன்றரைக்கண்ணன்கண்டீரொற்றியூருறையுத்தமனே.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை. (௫-ந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஒற்றியூருமொளிமதிபாம்பினை
ஒற்றியூருமப்பாம்புமதனையே
ஒற்றியூரவொருசடைவைத்தவன்
ஒற்றியூர்தொழநம்வினையோயுமே.

வரையினாலுயர்தோளுடைமன்னனை
வரையினார்வலிசெற்றவர்வாழ்விடம்
திரையினாற்புடைசூழ்திருவொற்றியூர்
உரையினாற்பொலிந்தாருயர்ந்தார்களே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம். (௬-ந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வண்டோங்குசெங்கமலங் கழுநீர்மல்கு மதமத்தஞ்செஞ்சடைமேன் மதியஞ்சூடித், திண்டோள்களாயிரமும் வீசிநின்று திசைசேரநடமாடிச் சிவலோகனார், உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதிவேண்டி யொற்றியூர்மேய வொளிவண்ணனார், கண்டேனான் கனவகத்திற் கண்டேற்கென்றன் கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே.

மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை, எண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை, பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை பிறிதல்லை யானாயும் பெரியாய் நீயே, உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை யுணர்வரிய வொற்றியூ ருடைய கோவே.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பண்-தக்கேசி. (எ-ந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

அழுக்குமெய்கொடுன் றிருவடியடைந்தே னதுவுநான்படப் பாலதொன்றானால், பிழுக்கைவாரியும் பால்கொள்வரடிகேள் பிழைப்பனாகிலுந் திருவடிப்பிழையேன், வழுக்கிவீழினுந் திருப்பெயரல்லான் மற்றுநானறியேன் மறுமாற்றம், ஒழுக்கவென்கணுக்கொரு மருந்துரையா யொற்றியூரெனு மூருறைவானே.

கட்டனேன்பிறந்தே னுனக்காளாய்க் காதற்சங்கிலி காரணமாக, எட்டினாற்றிகழுந் திருமூர்த்தி யென்செய்வானடியே னெடுத்துரைக்கேன், பெட்டனாகிலுந் திருவடிப்பிழையேன் பிழைப்பனாகிலுந் திருவடிக்கடிமை, ஒட்டினேனெனை நீசெய்வதெல்லா மொற்றியூரெனு மூருறைவானே.

திருச்சிற்றம்பலம்.

பண்-குறிஞ்சி. (எ-ந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பாட்டும்பாடிப்பரவித்திரிவார்
ஈட்டும்வினைகடீர்ப்பார்கோயில்
காட்டுங்கலமுந்திமிலுங்கரைக்கே
ஓட்டுந்திரைவாயொற்றியூரே.

ஒற்றியூருமரவும்பிறையும்
பற்றியூரும்பவளச்சடையான்
ஒற்றயூர்மேலூரனுரைத்த
கற்றுப்பாடக்கழியும்வினையே.

திருச்சிற்றம்பலம்.

## பட்டினத்துச் சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.

ஐயுந்தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவல்யான்
செய்யுந் திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப்போல வழகியதாந் தொண்டர்
உடலுருகத் தித்திக்கு மோங்கு புகழொற்றிக்
கடலருகே நிற்குங்கரும்பு.



ஒடுவிழுந்து சீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன்—கடுவருந்தும்
தேவாதி தேவன் திருவொற்றியூர்த் தெருவிற்
போவாரடியிற் பொடி.

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்களெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றியூர்.

திருச்சிற்றம்பலம்.

## திருவொற்றியூர் திருப்புகழ்.

அருணகிரிநாதர்.

திருச்சிற்றம்பலம்.

தனதத்தன தானதன தனதத்தன தானதன—தனதான

சொருபப்பிர காசவிசு வருபப்பிர மாகநிச
சுகவிப்பிர தேசரச சுபமாயா-
துலியப்பிர காசமதசொலியற்றர சாசுவித
தொகைவிக்ரம மாதர்வயி றிடையூறு,
கருவிற்பிற வாதபடி யுருவிற்பிற மோதஅடி
களையெத்திட ராகவகை யதின்மீறி-
கருணைப்பிர காசவுன தருளுற்றிட ஆசில்சிவ
கதிபெற்றிட ரானவையை யொழிவேனோ,
குருகுக்குட வாரகொடி செருவுக்கிர ஆதபயில்
பிடிகைத்தல ஆதியரி மருகோனே-
குமரப்பிர தாபகுக சிவசுப்பிர மாமணிய
குணமுட்டர வாவசுரர் குலகாலா,
திருவொற்றியூருமருவு நகரொற்றியுர் வாரிதிரை
யருகுற்றிடு மாதிசிவ னருள்பாலா-
திகழுற்றிடு யோகதவ மிகுமுக்கிய மாதவர்க
ளிதயத்திட மேமருவு பெருமானே.

திருச்சிற்றம்பலம்.

## சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்.

(கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்.

கண்ணப்பா வென்றருளுங் காளத்தியப்பாமுன்
வண்ணப்பால் வேண்டு மதலையைப்பால்.வாரிதியை
யுண்ணப்பா வென்றுரைத்த வொற்றியப்பா வந்தருள
வெண்ணப்பா வென்றழு மிவ்வேழைமுகம் பாராயோ.

மஞ்சுபடுஞ் செஞ்சடில வள்ளலே யுள்ளுகின்றோ
ருஞ்சபடும் வண்ணமரு ளொற்றியூ ருத்தமனே
நஞ்சுபடுங் கண்டமுடை நம்பனே வன்றுயராற்
பஞ்சுபடும் பாடுபடும் பாவிமுகம் பாராயோ.

கண்ணாரமுதே கரும்பே யென்கண்ணே யென்
னண்ணாவுன் பொன்னருடா னார்ந்திடுமோ வல்லதென்று
நண்ணாதோ யாது நணுகுமோ வென்றுருகி
யெண்ணாது மெண்ணு மிந்த வேழைமுகம் பாராயோ.

விதியிழந்த வெண்டலைகொள் வித்தகனே வேதியனே
மதியிழந்தோர்க் கேலாவ ளொற்றி வானவனே
நிதியிழந்தோர் போலயர்ந்து நின்னுடைய வாழ்க்கைப்
பதிவிரும்பி வாடுமிந்தப் பாவிமுகம் பாராயோ.

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

பண்ணாலுன்னருட் புகழைப் பாடுகின்றார் பணிகின்றார் நின்னழகைப் பார்த்துப் பார்த்துக், கண்ணா வுளங்குளிரக் களித்தானந்தக் கண்ணீர் கொண்டாடுகின்றார் கருணைவாழ்வை, யெண்ணா நின்றனை யெந்தா யெந்தா யெந்தா யென்கின்றார் நின்னன்ப ரெல்லாமென்ற, னண்ணா நானொரு பாவி வஞ்சநெஞ்சா லலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ.

எப்பாலு நின்னன்ப ரெல்லாங்கூடி யேத்துகின்றார் நின்பதத்தை யேழையேனோன், வெப்பாய் மடவியர்தங் கலவிவேட்டு விழுகின்றேன் கண்கெட்ட விலங்கேபோல, விப்பாரின் மயங்குகின்றே னன்மையொன்று மெண்ணுகிலேன் முக்கணுடை யிறைவாவென்ற, னப்பாவென் னுருயிர்க்கோர் துணைவாவீணி னலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ.

பொய்யாத நின்னடியா ரெல்லா நல்ல புண்ணியமே செய்துநினைப் போற்றுகின்றார், மையாநின் றலைகின்ற மனத்தாலிங்கே நானொருவன் பெரும்பாவி நாயேன் றீமைச், செய்யாநின் றுழைக்கின்றேன் சிறிதுநின்னைச் சிந்தியேன் வந்திக்குந் திறமுநாடே, னையா வென்னப்பா வென்னரசே வீணினலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ.

தெருளுடையார் நின்னன்பரெல்லா நின்றாட் சிந்தையில்வைத்தானந்தந் தேக்குகின்றார், மருளுடையே னானொருவன் பாவி வஞ்சமனத்தாலே யிளைத்திளைத்து மயங்குகின்றே, னிருளுடையே னேர்பூட்டும் பகடுபோலிங்கி லுழப்பி லுழைக்கின்றே னெல்லாம்வல்ல, வருளுடையா யாளுடையா யுடையாய் வீணி லலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ.

கொலையறியாக் குணத்தோர் நின்னன்பரெல்லாங் குணமேசெய்துன் னருடான் கூடுகின்றார், புலையறிவே னானொருவன் பிழையேசெய்து புலங்கெட்ட விலங்கேபோற் கலங்குகின்றே, னிலையறியே னெறியொன்று மறியே னெங்கு நினையன்றித் துணையொன்று மறியேன் சற்று, மலையறியா வருட்கடலே யாள்க வீணி லலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ.

# திருவொற்றியூர் புராண வரலாறு.

## நைமிசாரணியச் சருக்கம்.

கருணாநிதியாகிய கண்ணுதற் பெருமான் றிருவடியைக் கனவிலு மறவாத சில முனீந்திரர்கள் நைமிசாரணியத்தில் சிவ விரதம் பூண்டு, சிவபூசை செய்து, சிவராஜயோக சமாதியில் எழுந்தருளியிருக்கையில், ஒருநாள் அவ்விடத்தில் சிவவேடப் பொலிவுடன் சிவநாம சங்கீர்த்தனஞ் செய்துகொண்டு சூதமா முனிவர் வந்தருளினார். அவரைத் தரிசித்தவுடன் முனிவர்கள் எழுந்து எதிர் சென்று சாஷ்டாங்கமாக வணங்கிச் சோடசோபசாரம் செய்து எதிரிருந்து வினவுவாராயினர். சைவமுனிபுங்கவரே? பலகலையுந் தெரிந்தவரே? வேதாகமத் துண்மை யறிந்தவரே? சிவபரஞ்சுடரை மறவாதவரே? தேவரீர் சிற்சில தினங்கட்கு முந்தி எமக்குப் பச்சிளங் கொடியாகிய பார்வதியாம் கற்பகவல்லி சமேதரான கபாலீஸ்வரர் எழுந்தருளியிருக்கும் திவ்வியதலமாகிய் திருமயிலையின் மகிமையினை சொல்லிவந்தபோது அதன் உத்தமதிசையில் திருவொற்றியூரென்னுமொரு தலமுளதாகக் கட்டளையிட்டிருந்தீர். அதன் சிறப்பைக் கேட்க ஆவல்கொண்டிருக்கின்றோம் தயைசெய்தருள வேண்டுமென்றனர். திருவொற்றியூர் எனக் கேட்டமாத்திரத்தில் சூதமுனிவர் தமது இருவிழிகளிலும் ஆனந்தக் கண்ணீர் ததும்ப, மயிர்ப்புளகாகிதங்கொண்டு, பரவசமுற்று, என் புண்ணியமே புண்ணியம் எம்பெருமான் தியாகராஜனுடைய திவ்விய க்ஷேத்திரத்தின் மகிமையினை இன்று உங்கட்குச் சொல்ல வாய்ந்த பாக்கியமே பாக்கியம், முனிவர்களே? உங்களால் திருவொற்றியூர் என்று நான் கேட்டமாத்திரத்தில் எனது பூர்வ வினையனைத்தும் இன்றோடே யொழிந்துவிட்டது. இன்னமும் நான் அத்திருவொற்றியூர் மகிமையினைச் சொல்ல ஆரம்பிப்பேனேல் இச்சென்மத்தோடே எனது பிறவியொழியு மென்பதிற் றடையில்லை. திருவொற்றியூர் திருவொற்றியூர் என்று சொல்லிக்கொண்டிருப்பார்க்கு எமபயமே கிடையாது. திருவொற்றியூரினுக்குப் போக வேண்டுமென்று தன்வீட்டிலிருந்து ஒருவன் புறப்பட்டவுடனே ஒரு ஜென்மத்தில் செய்த பாப மனைத்தும்ஒழியும். திருவொற்றியூர் எல்லையினை மிதித்தவுடன் பூர்வஜென்மத்திற் செய்த பாவ மனைத்தும் ஒழியும். அத்தலத்து பச்சிளங்கொடியாகிய வடிவுடை நாயகியைத் தரிசித்தபேர்கட்கு இம்

மையில் நல்ல மனைவியும் நல்ல புத்திரரும் நல்ல சம்பத்தும் உண்டாகுவதுடன், மறுமையில் திருக் கைலாயத்தினையே யடைவர். திருவொற்றியூரில் தேகம் நீங்கினவர்கள் இந்திரன் பிரமன் விஷ்ணு முதலியோர் வாழுமுலகிற்கு மேற்பட்ட சிவலோகத்தை யடைவர். அத்தலத்தில் அன்னதானஞ் செய்வோர் இந்திர பதவி யடைவார். திருவிழாசெய்து வைப்போர் பிரமலோக மடைவர். ஆலய கைங்கிரியம் செய்வோர் விஷ்ணுலோகமடைவர். யாரைநோக்கி பிதிர்த்தருப்பணம் செய்கின்றனரோ அப்பிதிரர்கள் யாவரும் சிவபதவியேயடைவர். திருவொற்றியூர்த் தியாகராஜாவின் நடனத்தைத் தரிசித்தவன் வேறுதலததிற்குச்செல்ல மனமுடையவனுவனே. திருவொற்றியூரில் உலக மாதாவாகிய வடிவுடை நாயகியைத் தரிசித்தவர் கண்களே கண்கள். மற்றையர் கண்களை வாய்ந்திருக்கினும் அவையனைத்தும் புண்களேயாம். இந்திரன் பொன்னுலகத்தினை யடைந்ததும், பிரமன் சத்தியவுலகத்தினை யடைந்ததும், விஷ்ணு வைகுண்டத்தை யடைந்ததும் திருவொற்றியூரைத் தரிசித்ததனால் வந்த பாக்கியமேயன்றி வேறில்லை. அத்தலத்திலிருக்கிற கற்களெல்லாம் இலிங்கங்கள், விருட்சங்களெல்லாம் கற்பகங்கள், நீரெல்லாம் கங்கை, இத்தலத்திற் சாப்பிடுகிற உணவுகளெல்லாம் தேவாமிர்தம், அத்தலத்தில் சஞ்சரித்தல் பூமி பிரதட்சணஞ் செய்தலாகும், அவ்வூரிற் சொல்லும் வார்த்தைகள் வேதமாகும், அத்தலத்தில் நித்திரை செய்தல் நிஷ்டையாகும். ஆனதால் அத்தலமே சிவலோகமாம், நான்கு வேதங்களை யுணர்ந்தவர்களாயினும், ஐவகை யாகங்களை நிறைவேற்றினவர்களாயினும், அஷ்டாங்க யோகம் செய்தவர்களாயினும், தவம், தானம் செய்பவர்களாயினும், திருவொற்றியூரைத் தரிசியாதவர் முத்தியடைய மாட்டார். தெய்வலோகத்தில் வாழ்கின்ற தேவர்களும் இத்திருவொற்றியூரிலே புழுவாகவேனும் பிறக்க ஆசைப்படுவார்களேயானால், அத்தலத்தின் மகிமையை என்னவென்று சொல்வது. ஒரு கொடியின் வேரில் நீர்வார்த்தால் அக்கொடியும் அதிலிருக்கிற புஷ்பங்களும் இலைகளும் குளிர்ச்சி யடையுமாறுபோல, திருவொற்றியூரில் குற்றமில்லாமல் பூசை நடக்குமேயானால், காசி முதலிய எல்லாத் தலங்களிலும் பூசை நடந்ததாகும். திருவொற்றியூரைத் தரிசியாதவர்கள் உயர்ந்த குலத்தவரே யாயினும் நீசரே யாவர், நல்ல குண முடையவ ராயினும் தீயரே யாவர், இத்தலத்துக்கு வடிவுடை நாயகியாகிய உலக மாதாவினை மனம் வாக்குச் சகாய மொருமிக்க அன்புடனே யார் வணங்கித் தோத்தரிக்கின்றனரோ, அவர்கள் எண்ணிய எண்ணமெல்லாம் உள்



ளங்கை நெல்லிக் கனியென்ன அடைவாரென்பது முக்காலுஞ் சத்தியம். திருவொற்றியூரின் மகிமையனைத்தும் எடுத்துச்சொல்ல ஆயிர நாவுடைய ஆதிசேடனுக்கே முடியாதானால் ஒரு நாவினையுடைய அடியேன் என்னவென்று உங்கட்கு இன்று சொல்லப் போகிறேன். ஆயினும் எனது சிற்றறிவினுக்குத் தெரிந்த மாத்திரம் ஒரு சிறிதே சொல்ல ஆரம்பிக்கின்றேன். நீங்கள் யாவரும் மனவொருமையுடன் சிவத்தியானத்திலிருந்து மிகுந்த பயபக்தியுடன் கேட்பீராக. எனது ஆசிரியர் வியாசபகவான் பூர்வத்தில் எனக்குச் சொல்லியிருந்தபடி உங்கட்குச் சொல்லத் தொடங்குகிறேன். என விபூதியை யெடுத்துச் சிவ சிவ வென நெற்றியிலணிந்து வடிவாம்பிகையும் படம்பக்க நாதரையும் மனதிலே தியானஞ் செய்துகொண்டு சொல்ல ஆரம்பித்தனர்.

நைமிசாரணியச்சருக்க முற்றிற்று.

## இலிங்கோற்பத்திச் சருக்கம்.

சிவ தத்துவஞான தபசிகளே, இந்தவராக கற்பத்தின் முன்னர் சென்ற பதுமகர்பத்திலே, இவ்வுலகமுழுதும் [illegible] முழுகிவிட்டது. மறுபடியும் பழையபடியே உலகத்தை யுண்டாக்குவதற்குப் பிரமனைச் சிருஷ்டிக்கும் பொருட்டு எண்ணி, அகண்ட வைபவ சச்சிதானந்தப் பிழம்பாகிய பரமசிவனை மனதிலே தியானஞ் செய்துகொண்டு, வேதமூல மந்திரமாகிய மகா பஞ்சாட்சரத்தினை நாவிலே யுச்சரித்து, திருப்பாற்கடலிலே ஆதிசேடன்மீது விஷ்ணு மூர்த்தியானவர் அறிதுயிலமர்ந்தனர். கண்ணுதற்பெருமான் கருணையினால் அவ்விஷ்ணுவின் உந்தியிலிருந்து ஒரு தாமரையுண்டாகி அதில் பிரம்மாவானவர் உதயமாயினர். அப்பிரம்மா உலகத்தையுண்டாக்கக் கருதி, மூலாதாரத்தில் கீழ்நோக்கிய முகமாய்க் கண்களை மூடித்து, பெரிய குண்டலி சத்தியாகிய பாம்பினை கும்பித்த பிராண வாயுவால் அக்கினி மண்டலத்தினை மூட்டி எழுப்பி, மூலாதாரமுதல் ஆக்கினை யீறாகவுள்ள ஆறாதாரங்களிடத்தும் ஒழுங்காகச்சென்று, ஆங்காங்குள்ள தெய்வங்களைத் தரிசித்து, சந்திரமண்டலத்தினின்றும் சிந்தும் அமுதப்பிரவாகத்தை உள்ளே நிரப்பி, வாயால் நிறையமடுத்து, அங்குத் தோன்றும் தீபமும் மின்னலும் பந்தமும் விரிசுடம் கதிரும் மதியும் போன்ற ஒளியைக்கண்டு, இவை யெல்லாவற்றையுங் கடந்த அழிவில்லாத சிவ அருட்பெருஞ் சோதியைத் தரிசித்து, அவாங் மனோ கோசரனாகிய முழுமுதற் கடவுளைத் தியானித்த மாத்திரத்தில், மான் மழு சதுர்புஜ காளகண்ட திரிநேத்திர தாரியாய், உலக

மாதாவாகிய அம்மை யிடது பாகராய், இடப வாகனரூடராய்ச் சிவ
கணங்கள்சூழச் சர்வைஸ்வரிய சம்பன்னராகிய சிவபெருமான் காட்சி
தந்தருள, உடனே பிரமன் எழுந்து பலதரம் கீழேவிழுந்து கருணையங்
கடவுளே! கங்கை வேணியா! கறை மிடற்றோய்! காம நாசா! கால
காலா! கயிலைவாசா! கருணைசெய்க, அடியேனுக் குனையல்லால் வேறு
திக்கில்லையென இரண்டு கண்களிலுந் தாரை தாரையாய் நீர் சொரிய
நெக்குருகி நின்று ஐயனே! அடியேனை யாதரிக்க வந்த அருட்பெருங்
கடலே! நான் மானிடராகியும், தேவர்களாகியும், நாகர்களாகியும், பட்
சிகளாகியும், மிருகங்களாகியும், மற்றுமுண்டான அனேக ஜென்மங்க
ளாகப்பிறந்து பிரம்மனாக அடிக்கடி விஷ்ணுமூர்த்தி உந்திக் கமலத்தில்
உதித்து இறக்கிறேன். இனிப் பிறந்தும் இறந்தும் இளைக்கமாட்டேன்
இச்சனனத்தை விலக்கித் துன்பத்தைத் தீர்த்து அடிமைகொண்டரு
ளுவாய் என்றனர். பரமேஸ்வரன் நான்முகனை நோக்கி அன்ப! சனன
காலந் தொடங்கி நீ வெகுகாலம் வருத்தமடைந்தனை, இனிமேல் நலத்
தைப்பொருந்தி உத்தமமாக வாழ்வாய் பயப்படாதே யென்று திரு
வாய் மலர்ந்தருளி மறைந்தருளினர்.

சுவாமி மறைந்தவுடன் பிரம்மாவானவர் அளவற்ற துன்பமடை
ந்து, பெருங்கருணை வள்ளலாகிய சிவபெருமானை மறுபடியும் தரிசிக்க
வெண்ணி, பஞ்சேந்திரியங்களையு மொடுக்கி, பிராணவாயுவைப் பிங்
கலை வழியேயடக்கி, சுழிமுனையினிடத்து பொருத்த முற நிறுத்தி
ஆராதாரப் படிகளையுங் கடந்து, அச்சிவபரஞ் சுடருடன் தனது ஆத்
மாவைக் கூட்டித் தேகத்தை மூலாக்கினியாலே கழித்தார். இந்தப்பிர
காரம் பிரம்மாவானவர் செய்த சிவயோகபலத்தினாலே அவர் மூலாக்
கினியானது உலகத்தினைமூடிய வெள்ள முழுவதையு முண்ண, சிவா
னுக்கிரகத்தால் அப்பிரளயம் சிறு சலமாகத்திரண்டு தங்கியவுடனே,
அம்மூலாக்கினியின் திரட்சியின் மத்தியில் சதுர வடிவாகிய சித்திரப்
பலகை வடிவமாய் சிவலிங்க மொன்று உண்டாயது. அச் சிவலிங்கத்
திற்கு ஈசானதிசையில், அச்சலத்திரட்சி ஒரு தீர்த்தமாகி யாவருக்கு
மோட்சங்கொடுப்பதற் கேதுவாகத் தடாகமானது; அச்சிவலிங்கமோ
பொன்னுமன்று, வெள்ளியுமன்று, நவமணியுமன்று, மந்திர ரூபமு
மன்று, சூரியனுமன்று, சந்திரனுமன்று, நட்சத்திரமுமன்று, மின்னலு
மன்று, திக்குமன்று, ஆகாயமுமன்று, பூமியுமன்று, சிலையுமன்று ஆகை
யால் இன்ன வடிவுடையதென்று வாக்காலு மனத்தாலு மதிக்கக்கூடிய
தன்று, இத்தகைய விசித்திரரூபமான சுயம்புவாகிய பலகைவடிவான
சிவலிங்கத்தினின்றும் அனந்த கல்யாணகுண பரிபூரணராகிய சிவ



பெருமான் வெளிவந்து, அம்மூலாக்கினியைக் குளிர்ச்சியாக்கி ஒரு
யோசனைதூர முயரமாகவோங்கி நெருங்கிய நானூற் றுத்தொண்ணூற்
றுமடி யளவு தன்னைச் சூழ்ந்திருக்கும்படி அமைத்தனர். அங்ஙனமே
அம்மூலாக்கினி சூடுதணிந்து ஒருவருக்கும் புலப்படாமல் ஒருவன்னி
யங்கோயிலாய் விளங்கியது. பெருங் கருணையாளனாகிய பெருமான்
அவ்வன்னியங்கோயிலில் நிஷ்களங்கமாய்த் தீண்டாத் திருமேனியாய்
எழுந்தருளியிருந்தனர். இப்பெருமானை என்றும் விட்டுப் பிரியாத
தாதான்மியசத்தியாகிய அம்பாள் வடிவுடைநாயகியென்னும் அருமைப்
பெயருடன் இடதுபாகத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளினர்.
உலகமனைத்தும் பரந்த வெள்ளத்தை ஒற்றும்படி செய்ததால், ஒற்றியூ
ரெனத் திருநாமமும் விளங்கியது. பின்னர், பலகைவடிவாய் சிவலிங்க
ரூபங் கொண்ட படம்பக்க நாதர் தம்மைத் தியானித்து நிஷ்டையி
லிருந்துகொண்டிருக்கும் பிரம்மதேவனுக்குச் சிருஷ்டிதொழிலைத்தந்து
பின்ன ரொருகாலத்தில் சிவசாயுச்சியத்தினையு மளித்தனர். சிவகணங்
கள் முழுவதும் அத்திருவொற்றியூரில் காவலாகச் சூழ்ந்திருக்கும்
படி சிவபெருமான் ஏற்படுத்தியபடியால் இவ்வூர் பூலோக சிவலோக
மெனவும் ஜலப்பிரளய முண்டான ஆதிகாலத்தில் உதித்தமையால்
ஆதிபுரியெனவும் பெயருண்டாயது அன்றியும் சிவபுரி, பத்மபுரி, அவச
புரி, பிரமபுரி, நிரந்தரபுரியெனவு மழைப்பதுண்டு. இத்திருவொற்றி
யூரில் வன்னியங்கோயில் வடிவாம்பிகை சமேதரான படம்பக்க
நாதர் அருமறைமுடிவின் அகப்பொருளாய் மறைகளனைத்தும் மறைத்
திட்டுரைக்கும் மாமணியாய் முனிவர் போற்றும் மூவா முதல்வனாய்
முத்தியளிக்கும் முக்கட் பரமனாய், புண்ணிய வடிவப் புருஷோத்தம
னாய், கருமலங்கழிக்கும் கற்பகக் கொழுந்தாய், போகமளிக்கும் போ
தப்பெருக்காய் எழுந்தருளியிருந்து சிவனடியார்கள் உய்யும்பொருட்டு
ஆடல் புரியாநின்ற அரும்பதியாக எழுந்தருளி யிருப்பர். இத்தகைய
பரசிவப்பிரபு எழுந்தருளிய இத்தலத்தை [illegible] வலம் வருபவன் இப்பெ
ரிய பூமண்டலத்தைப் பிரதட்சணஞ் செய்த பயனைப் [illegible]றுவானென்
பது சத்தியத்திலுஞ் சத்தியமாம். இவ்வாலயத்தினை வலம் வருபவர்
ஒவ்வோரடிக்கு நூறு அசுவமேத வேள்விப்பயனை யடைவர். பிர
தோஷ காலத்தில் சோமசூக்[illegible]மாக வலஞ்செய்பவர் இல்லற நெறி
யின் கண்ணே இம்மையில் [illegible] பாலனவாகிய சுகங்களனைத்தும்
எய்தப்பெற்று, மறுமையிலே [illegible] சுட ரோங்க[illegible]வர். அது
வன்றி அவருடையகீர்த்தி என்[illegible]றும், சிவபெருமான்
திருவருள் கிடைக்கப்பெற்று அவர் திருவடி நீழலில் வாழவும்பெறு
வர். இவ்வாலயத்தில் தீபமிடுவோர் தீபமொன்றுக்கு ஆயிரம் [illegible]

மகா கைலாயத்தில் வாழும் பாக்கிய முறுவர். திருவொற்றியூர் திருவொற்றியூரென்று சொல்லிக்கொண்டிருப்பதே ஜென்மப் பிணியைப் போக்குதற் கேதுவாகிய தியான மந்திரமாம்.

இலிங்கோற்பத்திச் சருக்க முற்றிற்று.

---

## தியாகராஜநடனச் சருக்கம்.

சிவானந்தச் செல்வர்களே! வெள்ளியங்கிரியாகிய மகாகைலாசத்திலே, ஓர்நாள் தேவாதிதேவனாகிய சிவபெருமான் அகிலலோக நாயகியாகிய அம்பாளுடன் திருவோலக்கங் கொண்டெழுந்தருளி யிருந்தபோது, உபய சம்புவாகிய நந்தியம்பெருமான் பரமேஸ்வரன் சந்நிதானத்திற் சென்று, சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்துநின்று இரண்டு கரங்களையும் அஞ்சலியாகக் குவித்துப் பலதோத்திரம்புரிந்து, ஐயனே ஆனந்தமென்னும் அமுதங் கலந்த போறிவே! கிருபா சமுத்திரமே! மறைமுடிகளில் விளங்கு மாமணியே! முக்குணங்கடந்த முதல்வனே! உயர் ஒப்பில்லாதவனே! சரணம்! சரணம்! என்று ஒரு விண்ணப்பஞ் செய்யத்தொடங்கினார். அப்பனே! அடியேன் குறைப்பாட்டினுக்குத் தேவரீர் திருச்செவி சாத்தியருளவேண்டும். இம்மகா கைலாயத்தில் பிரதோஷ காலத்தில் தேவரீர் செய்தருளிய ஞானத்தாண்டவத்தைத் தரிசித்துள்ளேன். அன்றியும், தில்லைவனமாகிய சிதம்பரத்துப் பொற்சபையிலும், துவாத சாந்த தலமாகிய மதுரை இரசித சபையிலும், திருவாலங்காட்டு இரத்தின சபையிலும், திருநெல்வேலி தாமிரசபையிலும், திருக்குற்றாலத்துச் சித்திர சபையிலும், தேவரீர் ஆனந்தத் தாண்டவத்தைக்கண்டு களித்துள்ளேன். ஆனால் குந்திக்கொண்டேசெய்தருளுநடனத்தைத் தரிசிக்க மிக்க ஆவலுற்றிருக்கிறேன். அடியேன் கோரியபடி பிரசாதித்தருள வேண்டுமென்றனர். பெருங்கருணை குடிகொண்ட பெருமான் திருநந்தி தேவரை நோக்கி அன்பனே! நீ விரும்பியபடியே செய்தருளுவோம். அந்த நடனம் உனக்கே யல்லாமல் உலகத்தின் கண்ணுள்ள நமது அடியவர் யாவருக்கும் பிரயோசனமாக முடியும். உலகத்திலே இமயமலைக்குத் தெற்கே பாலாறு பாயும்பூமியிலே, கிழக்குச் சமுத்திரதீரத்திலே, நமக்கு மிக்க அன்புடையதாய், நாம் சுயம்பு வடிவமாய் எழுந்தருளி யிருப்பதும், தரிசித்தவர்கட்கு உள்ளங்கை நெல்லிக்கனி யென்ன மோட்சத்தைக் கொடுப்பதும், நமது அடியார்கள் எண்ணவேண்டினும் அவைகளையெல்லாம் தடையறப் பாலிப்பது மாகிய திருவொற்றியூர் என்னுந் தலத்



திற்குச் சென்று நீ தவஞ் செய்துகொண்டிருந்தால் நாம் அவ்விடத்தில் நடனதரிசனம் தந்தருளுகிறோமெனத் திருவாய்மலர்ந்தருளினர். கேட்ட நந்திதேவர் ஆனந்தங்கொண்டு ஆடிப்பாடிப் பெருமானிடத்தில் விடைபெற்று, கைலாயத்தினின்றும் நீங்கி, பிராமண வடிவங்கொண்டு வந்து திருவொற்றியூரை யடைந்து, படம்பர்க நாதர் ஆலயத்திற்கு ஈசான திசையில் தன்பெயரால் ஒரு தீர்த்த முண்டாக்கி அதின் சமீபத்தில் சிவராஜ யோகத்தி லமர்ந்திருந்தனர்.

அக்காலத்தில் விஷ்ணுமூர்த்தியானவர் திருப்பாற்கடலிலே ஆதிசேடன்மீது அறிதுயிலமர்ந்து தனது இருதயத்தினிடத்தே சோமாஸ்கந்தராகிய தியாகராஜர் திருநடனத்தை தியானித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில், திடீரென அத்திருவுருவ மறைந்துவிட்டமையால் விஷ்ணுவானவர் அதிக விசனமடைந்து ஒன்றுந் தோன்றாதவராகி, உடல்வேர்வை யுற்று, பதைத்து நடுங்கி, பெருமூச்சுவிட்டு, அழுது, மனந்தளர்ந்து, சோர்ந்து, கலங்கி, தனது கண்களிரண்டினும் நீர்பெருக சொற்கள் குழற, உதடு துடிக்க, எம்பெருமானே! எனது இருதய கமலத்தி லிதுகாறு நீங்காது நடன தரிசனத்தைக் கொடுத்துக்கொண்டிருந்த கருணையனே! யாதுபொருட்டு மறைந்தனை, அடியேன்செய்த குற்றம்யாது? மன்னித்தருளவேண்டும். தேவரீர் தரிசனங் காணாது எங்ஙனமுய்வேன், மறுபடியுமெப்போது எழுந்தருளுவீர். சீக்கிரம் கிருபைபாலித்தருள வேண்டுமெனப் பலவாறு தோத்தரித்தபோது, எனது அன்பனாகிய விஷ்ணுவே நீ திருவொற்றியூரினுக்கு மாசிமாதம் ஆதிவாரம் அமாவாசை மக நட்சத்திரம் கூடிய தினத்தில் வருவையாகில் நமது நடனத்தைத் தரிசிக்கலாம் அதுவரையில் அத்தலத்திற்குப் போய்த் தவஞ்செய்துகொண்டிருக்கக் கடவையென ஒரு அசரீரி வாக்கு ஆகாயத்தினுண்டாயது. அதுகேட்ட விஷ்ணுவானவர் ஆனந்தக் கூத்தாடிப் பாடிப் புளகாங்கிதங்கொண்டு, தன்னிடத்தில் சிவபெருமான் வைத்த கருணையைச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் சமீபத்திலிருந்த இலட்சுமியம்மையார் தனது நாயகனை வணங்கி, ஐயனே! நீர் சிறிது நேரத்திற்குமுந்தி மிக்க வியாகூல மடைந்தும், இப்போது மிக ஆனந்த முறுவதும் என்ன? தயைசெய்து சொல்லி யருளவேண்டுமென விஞ்ஞாபனஞ்செய்துகொள்ள விஷ்ணுவானவர் நடந்த வருத்தமானங்களை யெல்லாம் கூறித் திருவொற்றியூருக்குப் பிரயாணப் படுகையில், தானும் உடனே வர இலட்சுமிவேண்டிக்கொள்ள அதற்கிசைந்து தனது மனைவியுடன் விஷ்ணுவானவர் திருவொற்றியூரை யடைந்து, திருநந்திதேவரைத் தரிசித்துப் பணிந்து, சிவால

யத்துட்சென்று, படம்பக்க நாதர்முன் சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்து கிழக்குத்திசையில் ஒருதீர்த்தமுண்டாக்கி அதில் ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராட்சம்பூண்டு பஞ்சாட்சர தியானஞ் செய்துகொண்டு தவஞ்செய்து கொண்டிருந்தார். இலட்சுமியம்மையார் அத்தீர்த்தத்திற்கு அக்கினிதிசையில் ஒரு தீர்த்தமுண்டாக்கி யதிற்படிந்து விபூதி ருத்திராட்சந் தரித்துத் தவஞ்செய்து கொண்டிருந்தனர். இதனை உரோமச முனிவர் கேள்வியுற்றுத் தானும் நடன தரிசனஞ் செய்ய ஆசையுற்று ஆதிபுரியை யடைந்து நந்தியம் பெருமானையும், படம்பக்க நாதரையும் பற்பலதரம் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து மிகுந்த பய பக்தி யுடனே யொருபக்கத்தில் தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

இங்ஙனமிருக்கையில், முன்னிருந்த பிரம்மன் இறந்து வேறொரு பிரமன் அவதரித்து, உலகமனைத்தையு நோக்கி இதனை என்னையின்றி யுண்டாக்கினவர் யார்? நானல்லவோ சிருஷ்டி கர்த்தா? எனக் கர்வித்து உலக முழுவதையும் பார்ப்போமெனக் கருதிப் பூமியி லிறங்கி முதலில் திருவொற்றியூரினை யடைந்து, அங்குத் தவஞ்செய்துகொண்டிருக்கிற விஷ்ணுவை நோக்கி அவரை வணங்காது ஓ விஷ்ணுவே என்னையின்றி இந்தப் பிரபஞ்சத்தினைப் படைத்தவர் யாவர் என்றான் அப்போது விஷ்ணுவானவர் இவன் இறுமாப்பினைக் கண்டு கோபத்தை யுள்ளடக்கிக்கொண்டு, பிரம்மனே நீசொல்வது உண்மைதான் ஆயினும் இதோ நமக்குச் சமீபத்திலிருந்து கொண்டிருக்கிற உரோமச முனிவரிடத்துச்சென்று அவர் கரத்தில் ஓரிடத்தில் உரோமம் சிறிது இல்லாமலிருப்பதற்குக் காரணமென்னவெனக் கேட்போம், பின்பு உன்விஷயத்தைப்பற்றி யாலோசிக்கலாமென்றனர். அங்ஙனமே பிரம்மன் அவரிடம்போய் ஓ முனிவரே! உனக்குத் தேகமுழுவதும் உரோமம் மூடிக்கொண்டிருக்கக் கையில் மாத்திரம் சிறிது ரோமம் உதிர்ந்திருப்பதற்குக் காரணமென்னவென்றனர். அப்போது முனிவர் பிரம்மனைப் பார்த்துச் சொல்லுவாராயினர். ஐய, அனேக சூரியர்களும், அனேக சந்திரர்களும், அனேக தேவர்களும், அனேக இந்திரர்களும் இறந்தால், ஒரு பிரமன் இறந்துவிடுவான். அனேக பிரம்மர்களிறந்தால், ஒரு விஷ்ணுயிறப்பார், அந்தவிஷ்ணுக்கள் அனேகர் இறந்தால் என்தேகத்தில் ஒரு உரோமம் உதிரும், இப்படி எத்தனையோ கோடானுகோடிபேர் இறந்துபோனதால் சிலமயிர் உதிர்ந்திருக்கின்றன. என்னைப்போல பலர் இவ்வுலகிலுண்டு என்றவுடன் பிரம்மன் கேட்டு நடுநடுங்கி அடியேன் செய்தபிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று விஷ்ணு பாதத்தில் விழுந்து வணங்க, இருவரும் சேர்ந்து உரோமச



முனிவரை நமஸ்காரஞ்செய்து கொண்டு, திருநந்திதேவர் திருவடியில் வீழ்ந்து பணிய, நந்திதேவர் விஷ்ணுவைநோக்கி அன்பனே! இந்தப் பிரம்மனுக்கு மோட்ச விதாயகமான மகாமந்திரமாகிய பஞ்சாட்சரத்தை உபதேசித்து இத்தலத்தில் தவத்தைச் செய்துகொண்டிருக்கும்படி செய்திடுவாய் எனக் கட்டளையிட, அங்ஙனமே பிரம்மன் உபதேசம்பெற்று, வாயுதிசையில் பன்னசாலை யேற்படுத்தி, வடதிசையில் தன்பெயரால் ஒரு சிவலிங்கந் தாபித்துப் பூசித்து, சிவயாகஞ் செய்து கீழ்த்திசையிலிருந்து பஞ்சாட்சரஞ்செபித்து ஈசான திசையில் தவஞ்செய்து கொண்டிருந்தார் இவர் மனைவி சரஸ்வதியம்மையார் நிருதி திசையில் ஒருதீர்த்தமுண்டாக்கி அதன் கரையில் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

இந்தப் பிரகாரம் இவர்கள் திருவொற்றியூரின் பல திசைகளிலுமிருந்து தவஞ்செய்துகொண்டு, காலை மாலைகளில் சிவாலய மடைந்து படம்பக்க நாதரையும் வடிவாம்பிகையும் தரிசித்துக்கொண்டு எப்போது சர்வைஸ்வரியசம்பன்னனான பரமேஸ்வரன் திருநடனக்காட்சி நமக்குக் கிடைக்குமோவென இருந்துகொண் டிருக்கையில், தேவதுந்துமிகளாகிய பஞ்ச வாத்தியங்கள் ஆகாயத்தில் முழங்க, கற்பக புஷ்பமழை பொழிய, தேவர்கள் ஆரவாரிக்க, நான்கு வேதங்களுந் தோத்திரஞ்செய்ய, கந்தருவர்பாட, திருச்சின்னம் சங்குஒலிக்க, சிவகணம்புகழ, தேவர் முனிவர் நெருங்கிப்பணிய, படம்பக்கநாதர் எழுந்தருளியிருக்கும் சிவாலயத்திற்குப் பின்புறத்தில் மேற்றிசையில், திருமுகமண்டலமும் திருச்செவியில் குண்டலங்களும், சங்கக்குழைகளும், காளகண்டமும், திருக்கைகளும், மழுவாயுதமும், மானும், கங்காநதியும், கொன்றைமாலையும், சர்ப்பங்களும், புலித்தோலும், திருக்குடையும், அடிக்கடி அசையவும், சமீபத்தில் அம்பாளும், மூத்தபிள்ளையாரும், இளைய பிள்ளையாரும், அசையவும் தேவாதிதேவனாகிய மகாதேவனும் தியாகராஜப்பிரபு திருநடனந் தரிசனஞ்செய்தருளினர். நந்தியம் பெருமான் முதலியோர்கண்டு பூரித்துத் தங்களை மறந்து அதிசயங்கொண்டு பேரானந்த முற்று,

விளங்குமேன்மா சடையானே விறுமலமா சடையானே வியனனற்கோ வுடையானே விழையும் வனக்கோ வுடையானே, துளங்கும் பணிலக் குழையானே துன்னுங்கரத்திற் குழையானே, தோன்றுமம்மைக் களத்தானே தோடியா ரம்மைக் களத்தானே, தளங்கொடாமத் தோடையானே தரவுமரவத் தோடையானே, தரக்கினுரிவையரையானே தரும வரிவை யரையானே, நளங்கோள் வீரங் கழலானே நன்மை

யோளிர்போங் கழலானே, நாடுமாதி புரியானே நண்ணுமிழைமுப் புரியானே.

எனப்பல தோத்திரம் புரிந்து, சர்வ லோக சரண்யனாகிய சாம்ப சிவமே! சர்வ தயாநிதியே! சர்வமங்கள சொரூபனே! தியாகராஜப் பிரபுவே! இப்போது எங்கள் பூர்வ ஜென்மாந்தர புண்ணியத்தால் தேவரீர் காட்டியருளிய, இத்தகைய அரிய ஞான நடனத்தை இவ்வுலக மெல்லாம் உய்யும்பொருட்டு இத்தலத்தில் எந்நாளுந் தந்தருளும் பொருட்டு இத்திவ்ய திருவொற்றியூரினை விட்டு நீங்காது எழுந்தருளி யிருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள, அங்ஙனமே அவர்கள் வேண்டுகோளுக்கிசைந்து அங்ஙனமே தங்கிச் செய்துவருவாராயினர், இத்தியாகராஜநடனத்தை அமாவாசை முதலிய புண்ணிய நாள்களில் யாவர் அன்புடனே தரிசிப்பரோ அவர்கள் இம்மையிற் பொருட்செல்வத்தையும், மறுமையில் அருட்செல்வத்தையும் அடைவரென்பது சத்தியம்.

தியாகராஜநடனச் சருக்க முற்றிற்று.

## உமைகேள்விச் சருக்கம்.

சைவாசாரதுல்லியர்களே ! வேதத்தில் விளையாடும் விமலனாகிய பரமேஸ்வரன், எழுந்தருளி யிருக்கும் திருக்கைலாய மலையானது அருளே சொரூபமாயுள்ளது, சர்வசங்கார காலத்தில் எல்லா வுலகளும் அழியும்போது, இது ஆகாயத்தை நோக்கி வளருந்தன்மையுடையது. அநேகமாயிரமான இந்திரர்களும், பிரமர்களும், நாராயணர்களும் சிவசாரூபம் பெற்றுச் சூழ்ந்துகொண்டிருப்பது, இந்தகைய வெள்ளியங்கிரியின்மீது சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும்போது ஒருநாள் மலைவளர் காதலியாகிய பரமேஸ்வரி எழுந்து சுவாமியை வணங்கி, ஐயனே ! கலியுகத்தில் உலகின்கண்ணுள்ள ஆன்ம கோடிகளெல்லாம் சிற்றறிவும் அற்பவாயுளை யுடையவராயு மிருந்துகொண்டு இருவினையால் மொத்துண்டு, இறப்பிலும் பிறப்பிலுங் கட்டுப்பட்டு, அடையவேண்டிய ஆன்மலாபத்தை யுடையமாட்டாமல், மோட்சமின்னதென்பது தெரிந்துகொள்ளாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களோ அரிய பெரிய தவத்தைச் செய்யுந் தன்மையுடையவர்களல்ல. இத்தகைய மனிதர்கள் தேவரீர் திருவடியை யடைவதெப்படி, அவர்கட்கு எந்த விதத்தில் முத்தி கிடைக்கும் தயைகூர்ந்து திருவாய் மலர்ந்தருளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். சுவாமி கேட்டுப்



புன்னகை செய்து பார்வதியே ! நீ கேட்ட வார்த்தையானது உலோகோபகாரமானதே யாகும் சொல்லுவோம் கேட்பாயாக. இந்த உலகத்தில் அநேகமான தலங்களுண்டு, அத்தலங்கள்தோறும் நாமன்புடனே எழுந்தருளியிருக்கிறோம். அத்தகைய தலங்களில் விசேஷமானவை அறுபத்தெட்டாகும். இவ்வறுபத்தெட்டில் யாதாமொரு தலத்திற் சென்று அங்கிருக்கும் சிவதீர்த்தத்தில் சங்கற்ப விதியுடன் ஸ்நானஞ் செய்து அன்புடனே உதயகாலத்தில் நம்மையருச்சித்தவர்கள் மும்மலங்களு நீங்கிச் சிவலோகத்திற் சேருவர். கிரகண முதலிய புண்ணிய காலங்களில் பூசித்தவர்கள் ஜென்மங்கள்தோறும் செய்த பாவமனைத்து மொழிந்து ஞானமடைந்து சிவலோக மடைவர். இத்தலங்களில் பஞ்சாட்சரோபதேசம் பெற்றவர் ஞானிகளாகவே விளங்குவர். இத்தலங்களுள் முக்கியமான ஒருதல முண்டு, உலகத்தில் பாபங்களைச் செய்கின்றவர்களும் நம்மைத் தோத்திரஞ் செய்யாதவர்களும் சனன மரணநீங்கி முத்தியடையும்படி முன்னாளில் நாமுண்டாக்கியது ஆதிபுரியாகிய திருவொற்றியூரென்று சொல்லப்படும். அதில் பிரம்மனுடைய மூலாக்கினியையே ஆலயமாகக் கொண்டு அதில் சுயம்புவாய் வீற்றிருக்கின்றோம். அத்தலத்தில் உள்ள பிரம்மனுண்டாக்கிய பிரம்மதீர்த்தத்தைத் தரிசித்தவுடன் கொடியபாவ மெல்லாம் நீங்கும், அதில் ஸ்நானஞ் செய்யின் பிரம்மவிஷ்ணுக்களுக்குரிய பதவியை யருளுவோம். நமது சுயம்பு லிங்கத்தை தரிசித்தவர் அனேகங்கோடி அசுவமேத யாகங்களைச் செய்ததனாலுண்டாகும் புண்ணியங் கிடைக்கும், இத்தலத்தில் பிரம்மா பூசித்தமையின் சொர்னபுரியெனவும், நாராயணர் பூசித்தமையின் நாராயணபுரியெனவும், வேதங்கள் பூசித்தமையின் வேதபுரியெனவும் அழைக்கப்படும். நாமெப்போதும் நான்கு வேதங்களின் முடியிலும் இத்திருவொற்றியூரிலும் நடனஞ்செய்து கொண்டிருத்தலினால் இத்தல மேலானதாகும். காசியிலிறந்தால் முத்தியுண்டாம், சிதம்பரத்தைத் தரிசித்தால் முத்தி யுண்டாம், திருவாரூரில் பிறந்தால்முத்தியுண்டாம், திருவண்ணாமலையென்று சொன்னால் முத்தி யுண்டாம், திருவொற்றியூரை நினைத்தால் முத்தியுண்டாம். எல்லாவுலகுமழிந்தாலும் இத்தலமென்று மழியாது, பிரம்மதீர்த்தத்தில் ஒருதரம் ஸ்நானஞ் செய்து வஸ்திரம், சொர்னம், அன்னம், பசு, புத்தகம், கமண்டலம், யோகதண்டு இவைகளை உத்தம சிவனடியார்கட்குத் தானஞ்செய்யின் பஞ்சமா பாதகங்களும் விலகும் எக்காலத்தும் பொய் சொல்லாத ஒருவன் இதில் ஸ்நானஞ்செய்யின் மூப்பு நீங்கி இளமை வயதடைவன், கங்கை முதலிய எல்லா நதிகளும் இதிற் படிந்து பரிசுத்தமெய்தும் கிரகண காலங்களிலும், அமாவாசையிலும், பருவத்தி

லும், மாசப் பிரவேசத்திலும், இதில் ஸ்நானஞ்செய்யின் ஜீவன் முத்தரேயாவர். சுக்கில பட்ச அஷ்டமி திதியிலும், அப்பட்சத்துச் சதுர்த்தசியிலும், தைபூசத்திலும், மார்கழித் திருவாதிரையிலும், ஸ்நானஞ் செய்யின் மிகப் பரிசுத்தராவர். மாசிமகத்தில் ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராட்சந் தரித்து நம்மை வணங்கின் இம்மையில் செல்வமும் மறுமையில் மோட்சமுமடைவர்.

ஞாயிற்றுக்கிழமை உதய காலத்தில் பிராமணர்களும், உச்சிக் காலத்தில் நான்கு வருணத்தாரும் ஸ்நானஞ் செய்யலாம். சோமவாரம் உதயகாலத்தில் சந்நியாசிகளும், மங்களவாரம் மாதர்களும் ஸ்நானஞ் செய்யலாம். புதவாரம் தேவர்கள்வந்து ஸ்நானஞ் செய்வர். குருவாரம் கன்னிகைப்பெண்கள் ஸ்நானஞ் செய்தால் சீக்கிரம் விவாகமாகும் சுக்கிரவாரம் மாங்கலிய ஸ்திரீகள் ஸ்நானஞ் செய்யின் சௌபாக்கிய முண்டாம். சனிவாரம் ஸ்நானஞ் செய்யின் புத்திர சம்பத்துண்டாம். கைம்பெண்கள் ஸ்நானஞ் செய்யின் அவர் துன்பந்தீரும் ஏழுவாரங்களிலும் ஸ்நானஞ் செய்து நம்மை வணங்கில் அவர்கள் நினைத்ததெல்லாங் கைகூடும். இத்திருவொற்றியூரில் ஒருவருடம் வசித்துப் பத்தியுடையவராயிருப்பின் சகல பாவங்களும் நீங்கிச் சுற்றத்தாருடன் மோட்சமடைவர், இத்தலத்தில் நித்திரைசெய்தல் நிஷ்டை செய்தல்போலாம் பேசுதல் சிவபுராணம் படித்தல்போலாம், சஞ்சரித்தல் பிரதட்சணஞ் செய்தல் போலாம். யாதாமொன்றை நினைத்தல் யாகஞ்செய்தல் போலாம். இத்தலத்தில் நமக்குப் பசுதானம் செய்யில் அதன் ஒவ்வொரு உரோமத்திற்கு ஒரு கற்பகாலம் நம்முலகில் வாழ்வர்; இறந்தவர்களஸ்தியைச் சிறுகுடத்திலிட்டு வாய்மூடி இலட்சுமி தீர்த்தத்திற்குச் சமீபத்தில் புதைத்தால் புதைக்கப்பட்டவர் மோட்சமடைவர். இத்திருவொற்றியூரைவிட நமக்கு அன்பான தலமொன்றுமில்லை. பிரதி அமாவாசையிலும் நமது நந்திக்கு முன்னே நாம் செய்யும் நடனம்போல எந்த வுலகத்திலுஞ் செய்யமாட்டோம். இதைத்தரிசியாதவர்கள் எத்தகைய ஞானிகளாயினும் பாவிகளேயாவர், தரிசித்தவர்கள் பாவிகளாக விருக்கினும் புண்ணியவான்களே யாவர் சத்தியம்.

உமைகேள்விச் சருக்க முற்றிற்று.

## வேதசுத்திச் சருக்கம்.

தத்துவஞானதபசிகளே! முன்னம் ஒருபத்ம கற்பத்தில், விஷ்ணுவானவர் உலகமெங்கு மூடிக்கொண்ட ஜலப்பிரளயத்தில்



சிவத்தியானத்துடனே யோகநித்திரை செய்துகொண்டிருந்தனர். அவர் நாபியில் ஒருதாமரை யுண்டாயது. அத்தாமரையில் நான்முகக்கடவுள் பிறந்தார். அவர் நான்கு முகங்களில் நான்கு பழைய வேதங்களும், புராணங்களும் அவர் இருதயத்திலுண்டாகி யவர் முன் விளங்கின. அவைகளைப் பிரம்மன் கண்டு ஆனந்த முறுகையில், அவர் மனத்தே உலகத்தை யுண்டாக்குந்தன்மையைப் பெருங்கருணை வள்ளலாகிய பரமசிவம் தெரிவித்தார். உடனே பிரம்மன் முதலிய தேவர்களை யுண்டாக்கினர். பின்பு அசுரரையுண்டாக்கினர். இவர்களிருவரும் யாதொரு காரண மின்றியே யுத்தஞ் செய்யத் தொடங்கினர். அப்போது தேவர்கள் வேதமந்திரங்களை அஸ்திரமாக்கிப் பிரயோகித்து அசுரரைத் தோற்கடித்தனர். இதனைக்கண்டு தேவர்கட்கு வேதமந்திரபலமிருத்தலினால் அதை யபகரித்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணி, அவர்களுள் மது, கைடவன் என்னு மிருவரும் மாயையைத் துணையாகக்கொண்டு சென்று வேதத்தைக் கிரகித்துக்கொண்டு வந்து அதனைச் சின்ன பின்னமாக்கி நடுச்சமுத்திரத்தின் சேற்றில் புதைத்து விட்டுப்போயினர். 'வேதத்தை இழந்த தேவர்கள் நியமந் தவறி ஊமர்கள்போலிருந்து உள்ளந் திகைத்துப் பிரம்மனிடமுறையிட்டனர்கள். பிரம்மன் தனதுசிருஷ்டித்தொழில் தெரியாது மயங்கி விஷ்ணுவினிடங் கூறினன். உடனே விஷ்ணுவானவர் கருடன் மீதேறி அசுரர் முன்சென்று ஐயாயிரம் வருடம் யுத்தம்செய்து அவர்களைச் செயிக்க முடியாமல், சர்வமங்கள சொரூபியாகிய சிவபெருமானது யோகசத்தியை மனதிலே தியானித்துப் பூசிக்க, உடனே சத்தி பிரசன்னமானவுடன் சத்தியின் கிருபையால் அசுரரையெல்லாம் மயக்கமாகும்படி செய்து, பின்னர் தனது சக்கரப் படையால் அவர்களைக் கொன்றனர். உடனே பாதாளலோகஞ் சென்று அங்கு வேதங்களைத்தேடிக் காணாதவனாகி சமுத்திர தீரத்தினின்று வேதங்களை நோக்கி மறைகளே! நீங்கள் எங்கள் சிவபெருமானது திருவாக்கல்லவோ? உங்களைக்கொண்டல்லவோ சிருஷ்டியைப் பிரமனும், இரட்சகத்தை யானும், சங்காரத்தை உருத்திரனும் கற்றுக்கொண்டோம். மும்மூர்த்திகளாகிய நாங்கள் நடப்பது உன் கட்டளைப்படி யன்றோ? உங்களுடைய உச்சியிலன்றோ எல்லாம் வல்லப் பரசிவப்பிரபு எழுந்தருளியிருக்கின்றார். அவர் மகிமை யனைத்தும் உங்களாலன்றோ எங்கட்குத் தெரியும். நீங்கள் மறைந்து விட்டால் நாங்கள் உய்வது எப்படி? நீங்களிருக்குமிடம் எனக்குத் தெரிய வில்லையே? எனது முன் தயை செய்து வாரீரோ? என்று தோத்திரிக்க வேதபுருஷன் கேட்டு ஏ-விஷ்ணுவே எங்களை யசுரர் சமுத்திர நடுவில் வைத்திருக்கிறார், சீக்கிரம்

வந்து கொண்டுபோகக் கடவாயென்று ஓம் என்னும் பிரணவ சப்தத்தால் சொல்லியது. விஷ்ணு தெரிந்து மகரமீன் வடிவங்கொண்டு கடலைக் கலக்கி யுட்புகுந்து வேதங்களை வெளியே கொணர்ந்து திருவொற்றியூரில் படம்பக்கநாதர் சந்நிதியில் வைத்து வணங்கினார். உடனே கருணை நிதியாகிய பரமசிவன் தமது திருக்கண்களா னோக்கிப் பரிசுத்தமாக்கி விஷ்ணு கையிற் கொடுத்து அன்பரே! எமது அடியாரிற் சிறந்தவரே! இவ் வேதங்களின் பொருட்டு நீ மிக்கப் பிரயாசை யெடுத்துக் கொண்டாய் நீ சுகமாக உன்மனைவியுடன் சென்று நித்திரை செய்துகொண்டிருக்கக் கடவாய் எனத் திருவாய் மலர்ந்தருளினர். விஷ்ணுவானவர், எமது பெருமானே! என்னாற் சிறிதும் நடக்கவில்லை. தேவரீரிடத்திற் பத்திவாய்ந்த சிவனடியார்கட்கு அடியேன் ஊழியஞ்செய்து கொண்டிருக்கும் பாக்கியத்தினாலே எத்தகைய காரியங்களையும் செய்து முடிக்கின்றேன். பூர்வத்தில் எனது கண்ணொன்றைத் தேவரீர் திருவடியில் வைத்துப் பூசித்ததினாலேயும், திரிபுரதகனத்தில் இடபமாக விருந்து தாங்கினதினாலேயும், தேவரீர் வில்லினிடத்துப் பாணமா யமைந்ததினாலேயும், தேவரீருக்குப் பரிக்கிரக சத்தியாய் இருத்தலினாலேயும் நான் தேவர்கள் மதிக்க வாழுகின்றேனே யன்றி எனக்கெனவோர் சுதந்தர மெங்குளது எனப் பலவாறு புகழ்ந்து விடைபெற்றுத் திருப்பாற் கடலை யடைந்து சிவயோக நித்திரையிலமர்ந்தனர்.

வேதசுத்திச் சருக்க முற்றிற்று.

## பாணினிவியாகரணஞ்செய்த சருக்கம்.

சிவபஞ்சாக்கர நாவினர்களே! பாணினியென்னும் பிராமணரொருவர் வேதவுணர்ச்சி முற்றுந் தனக்குத் தோன்றும்படி பிரமாவை நோக்கி வெகுகாலந் தவஞ்செய்துக் கொண்டிருந்தனர். அவர்தவத்தினுக்கு மனமிரங்கி நான்முகக் கடவுள் பிரத்தியட்சமாகி அன்ப! நின்னுடைய தவத்தினுக்கு வியந்தோம். நீ விரும்பிய எண்ணம் முடிதற் கேதுவாகிய சூழ்ச்சியினைச் சொல்லுகிறோம் கேட்பாயாக. கல்விக்குரிய தெய்வம் கண்ணுதல் மூர்த்தியேயாம். அக்கல்வியா லாய வேதங்களை யனாதியில் திருவாய் மலர்ந்தருளியவர் தேவாதி தேவனாகிய சிவபெருமானேயாம். அப்புண்ணிய சொரூபியானவர் மிகுந்த விருப்பத்துடன் எழுந்தருளியிருக்குந்தலம் திருவொற்றியூரேயாம். ஆயிரவருடம்வரையில் அன்னியதலத்தில் தவஞ்செய்தலினா லுண்டாகும் பயன், இத்தலத்தில் ஒருநாள் செய்யும் தவத்தினாலேயே சித்தியாகும். இத்தலத்



தினுக்கு மேற்பட்டதலம் மூன்றுலோகத்திலுமில்லை. இத்தலஞ்சென்று நீ வடிவாம்பிகை சமேதரான படம்பக்கநாதரைப் பணிவாயாகில் உனது காரியம் தடையின்றிப் பலிக்குமெனக்கட்டளையிட்டு மறைந்தனர். பாணினிகேட்டு ஆனந்தமுற்று ஆதிபுரியையடைந்து எல்லையை மிதித்த மாத்திரத்தில் சாஷ்டாங்கமாகவிழுந்து எழுந்து இரண்டுகரங்களையும் சிரசின்மேற் குவித்துக்கொண்டு உட்புகுந்து பிரமதீர்த்தத்தில் படிந்து விபூதி ருத்திராட்சம் பூண்டு பஞ்சாட்சரம் தியானித்துக்கொண்டே மாடவீதிவலம்வந்து சிவாலயத்துட்பிரவேசித்து, நந்தியம்பெருமானிடத்தில் விடைபெற்று, மூத்தபிள்ளையாராகிய விநாயகக் கடவுளையும், இளைய பிள்ளையாராகிய சண்முகக்கடவுளையும் வணங்கிப் படம்பக்க நாதர் சந்நிதானத்தில் பலதரம் விழுந்து தோத்திரம்புரிந்து பச்சிளங்கிள்ளையாகிய பார்வதியாம் வடிவுடை நாயகியைத் தரிசித்துக் கொண்டு வெளிவந்து இரவு முழுவதும் நிஷ்டை கூடிப் பகல்முழுவதும் பழையபடி பூசித்து வருகையில் ஒருநாள் தீண்டாத் திருமேனி வாய்ந்த பலகை வடிவாகிய சிவலிங்கத்தினின்றும் பரிபூரணச் சச்சிதானந்தப் பிழம்பாகிய பரமேஸ்வரன் ஆசாரியவடிவங்கொண்டு வெளிவந்து பாணினியை நோக்கி உத்தம பிராமணரே! வேதங்களின் கருத்தனைத்தும் உன்மனத்தினிடத்தே விளங்கும்படி செய்தோம், அதனை யாதாரமாகக் கொண்டு வடமொழிக்கு ஒரு வியாகரணம் செய்யக் கடவை. அவ்வியாகரணமானது நமக்கு அதிகப்பிரியமாகிய தமிழ்மொழியில் விளங்குவதான அகத்தியன் இலக்கணம் போலப் பிரசித்த முறக்கடவது. இதோ உனக்கு முந்தி வேத முறை வகையாகப் பதினாலு சூத்திரம் ஒருதொகுதியாக நிறுத்தினோம், இதனைக் கொண்டு விரிவாக இலக்கணஞ் செய்யக்கடவாயென்று அந்தர்த்தானமாயினர். பாணினி எழுந்து கூத்தாடிப்பாடிப்பரவசமாகித் தெளிந்து விடைபெற்று வடதேயமடைந்து பெருமான் கட்டளைப்படி வியாகரணம் வகுத்துச் சுகமாக வாழ்ந்தனர்.

பாணினிவியாகரணஞ்செய்த சருக்க முற்றிற்று.

## வான்மீகமுனிவர் நித்தியத்துவம்பெற்ற சருக்கம்.

தவள நீறணிந்த தண்ணளி யுடையோரே! வருணபகவானது தவமகிமையினாற் பிறந்த வான்மீக முனிவரென்பவர் கிருபா சமுத்திரமாகிய சிவபெருமானுடைய திருவடிகளையே சிந்திப்பவர். ஆணவமல சம்பந்த மாகிய பிரபஞ்ச வாழ்வில் பற்றில்லாதவர். வேதாகம புராணேதிகாசங்களையே படிப்பவர், பவரோக மூல அருமருந்தாகிய

விபூதியையே யணிபவர். உருத்திராட்ச நீங்காத மார்பை யுடையவர். வேத விதாயகமாகிய பஞ்சாட்சரத்தையே உச்சரிப்பவர். சிவபெருமானையே யருச்சிக்குங் கைகளையுடையவர். பரம சாம்பவராகிய அம்முனிவர் ஒரு காலத்தில் சிவக்ஷேத்திரங்களைத் தரிசிக்கவேண்டுமெனும் ஆவல் மிகுதிகொண்டு, வடதிசை நோக்கிச்சென்று கங்கையில் ஸ்நானஞ் செய்து, காசிவிசுவநாதரைப் பணிந்து, மாளுவதேசம், குச்சரதேசம் முதலியவற்றிலுள்ள தலங்களைப் பணிந்து கொண்டு, ஸ்ரீசைலம், யானைசர்ப்பம், சிலந்தி பூசித்த திருக்காளத்தி, மயிலியல் சாயல்போன்ற மலைமகள் முப்பானிரண்டு தருமங்களைச்செய்த காஞ்சிபுரம், பிரம்ம விட்டுணுக்களுக்கரிய திருவண்ணாமலை, திருக்கோவலூர், திருமுதுகுன்றம், திருமுட்டம், திருமயிலாடுதுறை, திருவழுவையூர், திருவீழிமிழலை, திருவிடை மருதூர், திருவையாறு, திருவானைக்கா, திரிசிராப்பள்ளி, இரத்தினகிரி, திருவாலவாய், திருநெல்வேலி, திருக்குற்றாலம் ஸ்ரீராமர் பிரமகத்தி யொழிந்த திருவிராமேச்சுரம் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு வேதாரண்ணியத்தில் பர்ணசாலையில் தாபித்து அங்குச் சிலநாள் தங்கி வாழ்ந்துக் கொண்டிருக்கும்போது, ஒருநாள் மூவர்க்கு முதல்வனாகிய முழுமுதற் கடவுள் வெளிவந்து முனிவனே உன்னுடைய தொண்டினுக்கு வியந்தோம் உனக்கு வேண்டிய வரம் யாதென்ன? முனிவர், பெருமானே என்னுடைய இரண்டு கரங்களாலும் தேவரீரைத் தொட்டுப் பூசிக்கும் கிருபை செய்யவேண்டுமென்ன, சுவாமியானவர், முனிவனே பிரம்ம விஷ்ணு முதலிய தேவர்களே என்னைத் தொட்டு பூசிக்கத்தக்கவர், மற்றையரொருவராலு முடியாது; அங்ஙனம் பூசிக்க உனக்கு இச்சை யிருக்குமானால் உன் இஷ்டம் பூர்த்தியாகும்படி ஒன்று சொல்லுகிறேன். கேட்பாயாக நமது அடியவர் ஒருவருக்கு மாணிக்கம் கொடுக்கும்படி சென்று ஒரு திருவிளையாடலைச் செய்த தலம் இதற்குத் தெற்கேயுள்ளது, அங்கும் நாமே எழுந்தருளியிருக்கிறோம். அத்தலத்தில் திருப்பாற்கடலைக் கடைந்த் தேவாமிர்தத்தையே சிவலிங்கமாக்கித் தேவர்கள் அங்கு பூசித்திருக்கிறார்கள். அங்கு நீ சென்று உனது மனதிற்கிசைந்தபடி பூசைசெய்து கொண்டிருப்பாயென்று கூறிமறைந்தருளினர். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு அமுர்தபுரியை யடைந்து மருதீசரைப் பணிந்து தானே சிவலிங்கப்பெருமானை பலவருடம் அன்புடனே பூசித்து வருகையில், பரமசிவம் கிருபை கூர்ந்து வெளிவந்து அன்பனே! உனது பூசையை நடத்திக்கொண்டு இத்தலத்திலேயே ஊழிகாலம் வரையிலிருந்து பின்னர் நமது திருவடியில் நித்திய முத்தியை யடையக்கடவாய், இன்றுமுதல் இத்தலம்



உன்பெயரால் வான்மியூர் என வழங்கக் கடவது என்று சொல்லி மறைந்தனர். அதுமுதல் வான்மீகமுனிவர் திருவான்மியூரிலும், திருவொற்றியூரிலும் தரிசனம் செய்துகொண்டு இன்னும் இருக்கின்றனர்.

வான்மீகமுனிவர் நித்தியத்துவம்பெற்ற சருக்க முற்றிற்று.

## திருவொற்றியூர் திவ்விய க்ஷேத்திரத்தின் முக்கிய மகிமை.

இதுபத்துமகற்பத்தில் பிரளயகாலத்து அனுக்கிரஹத்தின்பொருட்டுத் தவஞ்செய்த பிரம்மதேவர் யோகாக்கினிமத்தியில் பரமசிவன் விசித்ரரூபமான பலகாகாரமாய்த் தோன்றி அவ்வக்னியே கோயிலாய் அமைய, எழுந்தருளிப் பிரளயவெள்ளத்தை விலகச்செய்தமையின் இப்பெயரெய்தியது எனப் புராணங்கூறுகிறது. இங்கு மஹாகைலாயத்தில் தாம் ஸந்தியாகாலத்துச் செய்கிற பிரதோஷநடனத்தைத் தரிசித்த நந்திதேவர் அமர்ந்து, இருந்து செய்கிற நித்ய நடனத்தையும் தரிசிக்கவேண்டுமென்னும் பிரார்த்தனையை நிறைவேற்றச் சிவபெருமான் நடனஞ்செய்தருளுவர். இதனை நாகராஜனாகிய ஆதிசேடன், விஷ்ணுமூர்த்தி, பிரம்மதேவர், கங்கையம்மையார், பார்வதியம்மையார் இவர்களும் தரிசித்து உய்ந்தார்கள். நந்திதேவர், ரோமசமுனிவர், வான்மீகிமுனிவர், வாசுகி, சேடன், சந்திரன், ராமபுத்ரனாகிய லவன், தொண்டைமான், பஞ்சதருக்கள் முதலியோர் பூசித்துப் பேறுபெற்றனரென்க. அகஸ்தியர், பரமசிவன் இமாசலத்தில் பார்வதிதேவியாரை மணந்த திருமணக்கோலத்தை இத்தலத்தில் தவங்கிடந்து மாசிமாதத்தில் தரிசித்துப் பெரும்பேறு பெற்றனர். இது பிரம்மோற்சவத்து 9-ந்திருநாளில் நடைபெறும். உபமன்யுமஹாமுனிவரிடத்துச் சிவதீக்ஷைபெற்றுப் பூசித்த வாசுகியைச் சிவபெருமான் தம்முடைய பலகாகாரத்திருவுருவத்தில் ஐக்யஞ்செய்துகொண்டமையாலும், அச்சர்ப்பவுருவம் திருவுருவத்தில் காணத்தக்கதாதலாலும் சுவாமிபடம்பக்கநாதராயினர். மாந்தாதாவென்னும் சூர்யவம்சத்தரசன் சிவபுண்யத்தால் எல்லையின்றி வளர்ந்த தான் ஆயுள்மிகுதியால் மூப்படைந்து கஷ்டப்படுவோனாய் எல்லாத்தலங்களது சட்டங்களையும் குறைத்தெழுதச்சொல்லிய ஏட்டில் தியாகேசர் வரிபிளந்து "திருவொற்றியூர் நீங்கலாக" என்று எழுதினமையின் சுவாமி எழுத்தறியும் பெருமான் என்றும் போற்றப் பெறுவர்.

அரசனுக்குக் கொடுக்கும் பொருட்டுத் தம்மன்பராகிய ஏலேல சிங்கருக்கு மாணிக்கங்கள் கொடுத்துத் தியாகராயினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்கெழுந்தருளியிருந்து ஞாயிறு கிழவருடைய புத்திரியாரா யவதாரஞ்செய்திருந்த சங்கிலிநாச்சியாரென்னும் அநிந்திதையாரை சிவபெருமானுடைய கட்டளையின்படி திருவாரூருக்குப் போவதில்லையென்று மகிழின்கீழ்ச் சபதஞ்செய்து மணஞ்செய்துகொண்டு வாழ்ந்து பலபதிகம் பாடியருளினார். செக்கார் மரபிலவதரித்த கலிய நாயனார் திருவிளக்குத்திருப்பணியை வறுமைவந்தகாலத்தும் விடாது செய்துவருநாளில் ஒருநாள் முட்டுப்பட்டுத் தம் கழுத்தை அரிந்து கொள்ளத்தொடங்கலும் பரமசிவன் எழுந்தருளித் தடுத்து அநுக்கிரஹம் செய்யப்பெற்றனர். சிவாநுபூதிச் செல்வராகிய பட்டினத்துச் சுவாமிகள் சிவபெருமானுடைய ஆஞ்ஞைப்படி பேய்க்கரும்பு இத்தலத்தில் தித்திக்கக்கண்டு இதுவே தனக்கு முத்திஸ்தானமென்று தெரிந்து சிவலிங்கவடிவமாய் விளங்கிநின்றனர். திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் சிவபெருமானருளால் அனேக திருப்பாடல்களைப்பாடி மறைந்தருளினர்.

---

சுவாமி-மாணிக்கத்தியாகர், தேவியார்-வடிவுடைநாயகி, விருக்ஷம் அத்தி, தீர்த்தம்-பிரம்ம தீர்த்தம்.

இந்த க்ஷேத்திரம் சென்னையிலிருந்து வடக்கே ஐந்து மைலிலுள்ளது.

181805